முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 561**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

12.04.2021, திங்கட்கிழமை

1. ஞானசக்தியே அரங்கா போற்றி
ஞானிகள் பலம் கொண்ட தேசிகா போற்றி
ஞானபண்டிதன் யானும் உந்தனுக்கு
ஞான அறிவுரை ஆசி தனை உரைப்பேன்
2. உரைக்கவே அரங்கன் தர்மம்
உயர்வான மக்களை படைக்கும்
குறைவில்லா அரங்கன் கொள்கை
குவலயத்தை ஞான பூமியாக ஆக்கும்
3. ஆக்கம் தந்து அரங்கனுள் என் சக்தி இருக்க
அரங்கனும் ஆறுமுகன் யானும் வேறில்லை
தேக்கமின்றி தொடர்ந்து ஓங்காரக்குடிலை
தொண்டர்கள் வருதல் கண்டு வருகவருக
4. வருகவே இந்த சூட்சுமம் அறியக் கூடும்
வல்லமையான நிலைகளும் பெறக்கூடும்
தருகின்ற தர்மத்தின் பங்களிப்பால்
தரணியோர் தர்மவானாக சிறந்து
5. சிறந்து அரங்கன் தேடுகின்ற
சிறப்பறிவு காணும் ஞானியர் பெருமக்களாய்
பரந்த உலகில் எண்ணிக்கை பெருகி
பாருலகமே ஞானிகள் நிறைந்த பூமியாக மாறும்
6. மாறுதலை செய்ய வந்த மகா தவசி அரங்கன்
மகத்துவம் அறிந்து உணர்ந்து தெளிந்த
பேருலகின் மக்கள் எல்லோருமே
பேரிடரை வெல்லும் சக்திமிக்கவர்களாக மாறி
7. மாறியே யுகமாற்றம் செய்யும் மன்னவர்களாக
மகத்துவம் கொண்ட சக்திகளாக தேறுவர்
ஆறுதலும் ஆக்கமும் அனைத்துமான
ஆறுமுக அரங்கஞானி தவமும் தர்மமும்

8. தவமும் தர்மமுமே இந்த உலகத்தை மீட்டு
தக்க பாதுகாப்பு மிக்க ஞான பூமியாக
பெருமைபட ஆறுமுகன் என் அருளோடு அமைக்கும்
புகன்றிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.